# IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE, TENKASI.

**Date : 16.09.2025**

**OS No. : 244/2019**

**Pw : 2**

**Name : திரு. அப்துல் குபூர்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். நான் பிறந்தது, படித்தது பாளையங்கோட்டையில்தான். சுப்பையாநாடார், சுரேஷ்குமாருக்கு எழுதிவைத்த உயில் சம்பந்தமாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 11.01.2019 ம் தேதி மேற்படி உயில் எழுதப்பட்டது. சுப்பையாநாடாரின் தகப்பனார், அவரின் முகவரி பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்கும் சுப்பையாநாடாருக்கும் 10 வருடங்களாக மாம்பழ வியாபார ரீதியாக பழக்கம் உண்டு. வியாபார ரீதியாக எங்களுக்குள் பழக்கம் உண்டு என்பதை காட்டக்கூடிய ஆதரவு எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுவாக, மாம்பழ வியாபாரம் மார்ச் மாதத்திலிருந்து ஜீலை மாதம் வரை இருக்கும் என்றால் சரிதான். மாம்பழ வியாபாரம் சம்பந்தமாகத்தான் நானும் சுப்பையாநாடாரும் சந்தித்து பேசுவது வழக்கம் என்றால் சரிதான்.

உயில் எழுதுவதற்கு 2 நாட்களுக்கு முன்னர் அதாவது, 09.01.2019 ம் தேதி என்னை அலைபேசியில் தொடர்பு கொண்டு உயிலில் சாட்சி கையொப்பம் போட அழைத்தார். என்னுடைய செல்போன் எண்ணின் அழைப்பு விவரங்களை ஆய்வுசெய்தால், சுப்பையாநாடார் என்னை தொடர்பு கொண்ட விவரம் தெரியவரும் என்றால் சரிதான், ஆனால் அந்த அலைபேசி எண்ணை நான் தற்போது மாற்றிவிட்டேன். உயில் எழுதிய அன்று நான் தென்காசிக்கு வியாபார விஷயமாக வந்திருந்தேன், அப்போது என்னை அலைபேசியில் அழைத்து சுப்பையா நாடார் தனது வீட்டிற்கு வரச்சொன்னார், அதன்பேரில்

பகவதி புரத்தில் உள்ள அவரது வீட்டிற்கு மதியம் 02.00 மணியளவில் சென்றேன். அங்கு முருகேசனும், சுப்பையாநாடாரும் இருந்தார்கள், வேறு யாரும் இல்லை. நான் வீட்டிற்குள் சென்றபோது அங்கு நிறைய பத்திரங்களை அடுக்கி வைத்திருந்தார். அதிலிருந்து உயில் ஆவணத்தை எடுத்துக்கொடுத்து என்னை படித்துப்பார்க்க சொன்னார். நான் அந்த உயில் ஆவணத்தை படித்துப்பார்த்தேன். யாருக்கு உயில் எழுதி வைக்கப்போகிறீர்கள் என்று கேட்டேன், அதற்கு சுப்பையா நாடார் தன்னுடைய பேரன் சுரேஷ் குமார் தான் தன்னை கவனித்துக்கொள்வதாகவும், அதனால் அவர் பெயரில் உயில் எழுதி வைப்பதாக சொன்னார். சுப்பையாநாடாருக்கு குழந்தைகள் கிடையாது என்று சொன்னால் சரிதான். சுப்பையா நாடாரின் மனைவியின் உடன் பிறந்த சகோதரியின் பேரன்தான் சுரேஷ்குமார்.

உயில் எழுதிய சுப்பையாநாடாருக்கு அப்போது வயது 94 ஆகும். அந்த நேரத்தில் சுப்பையா நாடார் வயோதிகம் காரணமாக நோய்வாய்ப்பட்டிருந்தார் என்று சொன்னால் சரியல்ல, அவர் ஆரோக்கியமாகத்தான் இருந்தார். நான் கையெழுத்து போட்ட உயில் ஆவணத்தை எழுதிய நபர் யார் என்று எனக்கு தெரியாது, சுப்பையா நாடார் ஏற்கெனவே டைப் செய்து வைத்திருந்தார். உயில் ஆவணத்தின் எழுத்துக்காரர் யார் என்ற விவரம் மேற்படி ஆவணத்தில் இருந்ததா என்றால் இல்லை. உயில் ஆவணத்தை சுப்பையாநாடார் பதிவுசெய்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது. எந்தெந்த சொத்துக்களைப்பொருத்து சுப்பையா நாடார் உயில் எழுதியிருந்தார் என்றால் பத்திர எண்ணை குறிப்பிட்டு சொத்து விவரம் எழுதியிருந்தார். தன்னுடைய சொத்துக்கள் மற்றும் தன் மனைவியின் பெயரில் உள்ள சொத்துக்கள், வங்கி சேமிப்பில் உள்ள தொகை அனைத்தையும் தன்னுடைய உடல்நிலை காரணமாகவும், வயோதிகத்தின் காரணமாகவும் சுரேஷ் குமார் என்பவருக்கு எழுதி வைப்பதாக உயிலில் வாசகங்கள் காணப்பட்டன.

சுப்பையாநாடார் 18.01.2019 ம் தேதி காலமாகிவிட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு சுரேஷ் குமார் மூலமாக தெரியவந்தது. பிரதிவாதிகள் என்ன கட்சி செய்கிறார்கள் என்ற விவரம் பற்றி சுரேஷ் குமார் என்னிடம் சொல்லவில்லை. சுப்பையா நாடாருடன் எனக்கு வியாபார ரீதியாக பழக்கம் உள்ள காரணத்தினால் அவருடன் பிறந்தவர்கள் மற்றும் அவர்களது வாரிசுகள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள என்னுடைய முகவரியில் நான் கடந்த 10 வருடங்களாக வசித்து வருகிறேன். உயில் ஆவணத்தில் என்னுடன் கையொப்பமிட்ட

மற்றொரு சாட்சியான முருகேசன் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி முருகேசன், சுரேஷ்குமாரின் சகோதரியின் கணவர் என்றால் சரிதான்.

வா.சா.ஆ.18 உயில் ஆவணத்தில், என்னுடைய முகவரி பாத்திமா நகர், பாளையங்கோட்டை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முகவரியில் முதலில் வசித்து வந்து அதன் பின்னர் தற்போது உள்ள பாளையங்கோட்டை, சாந்தி நகர் முகவரிக்கு மாறிவிட்டேன். 7 முதல் 9 பிரதிவாதிகளான இசக்கிமுத்து, இசக்கிமுத்து, பழனியப்பன் ஆகியோர் சுப்பையாநாடாரின் சகோதரியின் வாரிசுகள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சுரேஷ் குமாரை சுமார் 5 – 6 வருடங்களாக எனக்கு தெரியும். சுப்பையா நாடார் எழுதி வைத்ததாக சொல்லப்படும் உயில், அவரால் எழுதப்பட்டது கிடையாது என்றும், உயில் எழுதப்பட்ட காலக்கட்டத்தில் அவர் நோயுற்று இருந்தார் என்றும், மனநலம் பாதிக்கப்பட்டு இருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. சுப்பையாநாடார் உயிலில் கையொப்பமிட்டதை நான் பார்த்ததாக சொல்வதும், மற்றொரு சாட்சி கையொப்பமிட்டதை நான் பார்த்ததாக சொல்வதும், நான் அதில் சாட்சி கையொப்பமிட்டதாக சொல்வதும் பொய் என்றும், சுரேஷ் குமார் இந்த வழக்கிற்காக ஏற்பாடு செய்த பொய் சாட்சி நான் என்றும் மேற்படி உயில் ஆவணம் சுப்பையா நாடாரின் சொத்துக்களை அபகரிப்பதற்காக போலியாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi